www.Padasalai.Net



# விரைவுக் குறியீட்டு வினாக்கள்

GPK1TC

## 1. உறவுகளும் சார்புகளும்

1. $f : R \to R$ ஆனது $f(x) = x^2 + 2$ என வரையறுக்கப்படுகிறது எனில், 27 ன் முன் உருக்களை காண்க.

**(1) $5, -5$** (2) $\sqrt{5}, -\sqrt{5}$ (3) $5, 0$ (4) $0, 5$

$f(x) = x^2 + 2$

$f(5) = 5^2 + 2 = 25 + 2 = 27$

$f(-5) = (-5)^2 + 2 = 25 + 2 = 27$

27 ன் முன் உருக்கள் $5, -5$

2. $f\left(x - \frac{1}{x}\right) = x^2 + \frac{1}{x^2}$, எனில $f(x) =$ ________ .

**(1) $x^2 + 2$** (2) $x^2 - 2$ (3) $x^2 + \frac{1}{x^2}$ (4) $x^2 - \frac{1}{x^2}$

$f\left(x - \frac{1}{x}\right) = x^2 + \frac{1}{x^2}$

$x^2 + 2 = \left(x - \frac{1}{x}\right)^2 + 2$

$= \left[x^2 + \frac{1}{x^2} - 2x \times \frac{1}{x}\right] + 2$

$= x^2 + \frac{1}{x^2} - 2 + 2$

$= x^2 + \frac{1}{x^2}$

$\therefore f(x) = x^2 + 2$

3. $A = \{a, b, c\}, B = \{2, 3\}$ மற்றும் $C = \{a, b, c, d\}$ எனில் $n[(A \cap C) \times B]$ ஆனது

(1) 4 (2) 8 **(3) 6** (4) 12

$A = \{a, b, c\}, \quad B = \{2, 3\}, \quad c = \{a, b, c, d\}$

$A \cap C = \{a, b, c\} \cap \{a, b, c, d\}$

$= \{a, b, c\}$

$(A \cap C) \times B = \{a, b, c\} \times \{2, 3\}$

$= \{(a, 2)\ (a, 3)\ (b, 2)\ (b, 3)\ (c, 2)\ (c, 3)\}$

$n[(A \cap C) \times B] = 6$

4. $\{(x, y)/y = 2x + 3\}$ என்பதன் வரிசை சோடிகள் $(a, -1)$ மற்றும் $(5, b)$ எனில் $a$ மற்றும் $b$ ன் மதிப்புகள்

(1) $-13, 2$ (2) $2, 13$ (3) $2, -13$ **(4) $-2, 13$**

$\{(x, y)/y = 2x + 3\}, (a, -1)\ (5, b); a, b = ?$

$y = 2x + 3$

$(a, -1) \Rightarrow -1 = 2a + 3$ | $(5, b) \Rightarrow b = (2 \times 5) + 3$

$2a = -1 - 3$ $\quad b = 10 + 3$

$2a = -4$ $\quad b = 13$

$a = \frac{-4}{2} = -2$

$a = -2$

$\therefore a = -2,\ b = 13$

5. சார்பு $f : \mathbb{N} \to \mathbb{N}$ ஆனது $f(x) = 2x$ என வரையறுக்கப்படுகிறது எனில் $f$ ஆனது எவ்வகைச் சார்பு?
(1) ஒன்றுக்கு ஒன்றானது ஆனால் மேல் சார்பு இல்லை
(2) ஒன்றுக்கு ஒன்றானதும் இல்லை மற்றும் மேல்சார்பும் இல்லை
(3) ஒன்றுக்கு ஒன்றானது இலலை ஆனால் மேல் சார்பு
**(4) ஒன்றுக்கு ஒன்றான மற்றும் மேல்சார்பு**

$f(x) = 2x; \quad f: N \to N$

$f(1) = 2(1) = 2$

$f(2) = 2(2) = 4$

$f(3) = 2(3) = 6$




ஒன்றுக்கு ஒன்றான மற்றும் மேல்சார்பு

6. $f(x) = x + 1$, எனில் $f\left(f\left(f(y+2)\right)\right)$ ஆனது
(1) $y + 3$ **(2) $y + 5$** (3) $y + 7$ (4) $y + 9$

$f(y+2) = y + 2 + 1 = y + 3$

$f\left(f(y+2)\right) = f(y+3) = y + 3 + 1 = y + 4$

$f\left(f\left(f(y+2)\right)\right) = f(y+4) = y + 4 + 1 = y + 5$

7. ஒரு சார்பு $t$ ஆனது செல்சியஸ் வெப்பநிலையிலிருந்து ∴பாரன்ஹீட் வெப்பநிலைக்கு $t(c) = \frac{9c}{5} + 32$ என வரையறுக்கப்படுகிறது. ∴பாரன்ஹீட் வெப்பநிலை $95°$க்கு $c$ ன் மதிப்பானது
(1) 37 (2) 36 **(3) 35** (4) 29

$t(c) = \frac{9c}{5} + 32$

$t(35) = \frac{9}{5} \times 35 + 32 = 63 + 32 = 95$

$c$ ன் மதிப்பு $= 35$

8. $f(x) = mx + n$, இங்கு $m$ மற்றும் $n$ ஆகியவை முழுக்கள். மேலும் $f(-2) = 7$ மற்றும் $f(3) = 2$, எனில், $m$ மற்றும் $n$ ஆகியவற்றிற்குச் சமமானது
**(1) $-1, 5$** (2) $-1, -5$ (3) $1, -9$ (4) $1, 9$

$f(x) = mx + n,\ f(-2) = 7,\ f(3) = 2,\ m, n = ?$

$f(-2) \Rightarrow m(-2) + n = 7$

$f(3) \Rightarrow m(3) + n = 2$

$-2m + n = 7$ ………… (1)

$3m + n = 2$ ………….. (2)

(1) மற்றும் (2) ஐத் தீர்க்க

$-2m + \cancel{n} = 7$

$3m + \cancel{n} = 2$

$(-) \quad (-) \quad (-)$

$-5m \quad = 5$

$m = \frac{5}{-5} \Rightarrow m = -1$

$m = -1$ என (2) ல் பிரதியிட

$3m + n = 2$

$3(-1) + n = 2$

$-3 + n = 2$

$n = 2 + 3$

$n = 5$ $(m, n) = (-1, 5)$

9. $f$ என்ற மாறிலிச் சார்பை $\frac{1}{10}$ என்க. $f(1) + f(2) + \ldots\ldots + f(100)$ ன் மதிப்பானது

(1) $\frac{1}{10}$ **(2) 10** (3) 100 (4) $\frac{1}{100}$

$f$ என்பது மாறிலி சார்பு என்பதால், $x$ ன் மதிப்பும் மாறாது

$f(1) + f(2) + \ldots\ldots + f(100) = \frac{1}{10} + \frac{1}{10} + \ldots\ldots + \frac{1}{10}$

$= \frac{1+1+\ldots\ldots+1}{10} = \frac{100}{10}$

$= 10$

10. $f(x) = ax - 2,\ g(x) = 2x - 1$ மற்றும் $f \circ g = g \circ f$, எனக் கொடுக்கப்பட்டால், $a$ன் மதிப்பானது

(1) $-3$ **(2) 3** (3) $\frac{1}{3}$ (4) 13

$f(x) = ax - 2,\ g(x) = 2x - 1 \Rightarrow f \circ g = g \circ f$

$a = ?$

$f \circ g = f[g(x)] = f(2x - 1)$

$= a(2x - 1) - 2$

$= 2ax - a - 2$ ………… (I)

$g \circ f = g[f(x)] = g(ax - 2)$

$= 2(ax - 2) - 1$

$= 2ax - 4 - 1$

$= 2ax - 5$ ………………. (II)

$(I) = (II) \Rightarrow 2ax - a - 2 = 2ax - 5$

$2ax - 2ax - a - 2 = -5$

$-a = -3$

$a = 3$

11. $f(x) = \frac{1}{x}$ மற்றும் $g(x) = \frac{1}{x^3}$ எனில், $f \circ g \circ f(y)$ ன் மதிப்பு

(1) $\frac{1}{y^8}$ (2) $\frac{1}{y^6}$ (3) $\frac{1}{y^4}$ **(4) $\frac{1}{y^3}$**

$f(x) = \frac{1}{x},\ g(x) = \frac{1}{x^3}$

$f \circ g \circ f(y) = ?$

$f \circ g \circ f(y) \Rightarrow g \circ f(y)$

$f(x) = \frac{1}{x}; f(y) = \frac{1}{y}$

$g(x) = \frac{1}{x^3}$

$\therefore g\left(\frac{1}{y}\right) = \frac{1}{\left(\frac{1}{y}\right)^3} = y^3$

$g \circ f(y) = y^3$

$f \circ g \circ f(y) \Rightarrow f(y^3) = \frac{1}{y^3}$

12. $f(x) = 2 - 3x$ எனில் $f \circ f(1-x) = ?$

(1) $9x - 5$ (2) $5x - 9$ (3) $5x + 9$ **(4) $5 - 9x$**

$f(x) = 2 - 3x, \ f \circ f(1-x) = ?$

$f \circ f(1-x) = f[f(1-x)]$

$= f(2-3x) = f\big[f\big(2-3(1-x)\big)\big] = f[f(2-3+3x)]$

$= f[f(3x-1)]$

$= 2 - 3(3x-1)$

$= 2 - 9x + 3$

$= 5 - 9x$

13. $f(x) + f(1-x) = 2$ எனில் $f\left(\frac{1}{2}\right) = ?$

**(1) 1** (2) $-1$ (3) 5 (4) $-9$

$x = \frac{1}{2}$

$f\left(\frac{1}{2}\right) + f\left(1 - \frac{1}{2}\right) = 2$

$f\left(\frac{1}{2}\right) + f\left(\frac{1}{2}\right) = 2$

$2f\left(\frac{1}{2}\right) = 2$

$f\left(\frac{1}{2}\right) = 1$

14. $f(x) = \frac{x+1}{x-2}$ மற்றும் $g(x) = \frac{1+2x}{x-1}$ எனில் $f \circ g(x)$ ஆனது

**(1) சமனிச்சார்பு** (2) இருபடிச்சார்பு

(3) முப்படிச்சார்பு (4) மாறிலிச்சார்பு

$f(x) = \frac{x+1}{x-2}, \ g(x) = \frac{1+2x}{x-1}, \ f \circ g(x)$

$f \circ g(x) = f[g(x)] = f\left(\frac{1+2x}{x-1}\right)$

$= \frac{\frac{1+2x}{x-1} + 1}{\frac{1+2x}{x-1} - 2}$

$= \frac{\frac{1+2x+x-1}{x-1}}{\frac{1+2x-2x+2}{x-1}} = \frac{3x}{3}$

$= x$

15. $f$ ஆனது ஒரு சமனிச் சார்பு எனில், $f(1) - 2f(2) + f(3)$ ன் மதிப்பானது

(1) 1 **(2) 0** (3) $-1$ (4) $-3$

$f(1) - 2f(2) + f(3) = ?$

$x = x; \ f(1) = 1, \ f(2) = 2, \ f(3) = 3$

$f(1) - 2f(2) + f(3) = 1 - (2 \times 2) + 3$

$= 4 - 4 = 0$

GPK1TC

# 2. எண்களும் தொடர்வரிசைகளும்

1. $\sqrt{2}+\sqrt{8}+\sqrt{18}+\ldots\ldots$ என்ற தொடர்வரிசையின் '$n$' உறுப்புகளின் கூடுதல்
(1) $\frac{n(n+1)}{2}$ (2) $\sqrt{n}$ **(3) $\frac{n(n+1)}{\sqrt{2}}$** (4) 1

$\sqrt{2}+\sqrt{8}+\sqrt{18}+\ldots\ldots S_n=?$

$a=\sqrt{2},\quad d=\sqrt{8}-\sqrt{2}$

$=\sqrt{4\times 2}-\sqrt{2}\quad =2\sqrt{2}-\sqrt{2}$

$=1\sqrt{2}$

$S_n=\frac{n}{2}[2a+(n-1)d]$

$=\frac{n}{2}[(2\times\sqrt{2})+(n-1)(\sqrt{2})]$

$=\frac{n}{2}[2\sqrt{2}+\sqrt{2}n-\sqrt{2}]$

$=\frac{n}{2}[\sqrt{2}+\sqrt{2}n]$

$=\frac{n}{2}[\sqrt{2}(1+n)]=\frac{n(n+1)\sqrt{2}}{\sqrt{2}\times\sqrt{2}}=\frac{n(n+1)}{\sqrt{2}}$

2. 60002 மற்றும் 601 ஆகியவற்றின் வித்தியாசத்தை 6ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி
(1) 2 **(2) 1** (3) 0 (4) 3

வித்தியாசம் $=60002-601$

$=59401$

மீதி $=1$

```
     9900
 6 | 59401
     54
     ----
      54
      54
     ----
       001
```

3. $44\equiv 8$(மட்டு 12), $113\equiv 5$(மட்டு 12) எனில், $44\times 113\equiv$ ________ (மட்டு 12)
**(1) 4** (2) 3 (3) 2 (4) 1

$44\times 113=\underline{8\times 5}$ (மட்டு 12)

$=40$ (மட்டு12)

$=4$ (மட்டு 12)

```
      3
 12 | 40
      36
      --
       4
```

4. ஒரு மாணவன் முதல் நாள் B1 ம், இரண்டாம் நாள் B2 ம், மூன்றாம் நாள் B4 ம் என்ற வகையில் சேமிக்கிறான் எனில், 20நாட்களில் அவன் சேமித்த தொகை எவ்வளவு?
(1) $2^{19}+1$ (2) $2^{19}-1$ **(3) $2^{20}-1$** (4) $2^{11}-1$

முதல் நாள் → B1, இரண்டாம் நாள் → B2, மூன்றாம் நாள்→ B4

20 நாட்களில் → ?

$1+2+4+\ldots\ldots$

$a=1,\ r=\frac{2}{1}=2;\ S_{20}=?\quad a=1, r>1;$

$S_n = \frac{a(r^n-1)}{r-1} = \frac{(2^{20}-1)}{2-1} = \frac{2^{20}-1}{1} = 2^{20}-1$

5. $S_n = k + 2k + 3k + \ldots\ldots + 100$ என்ற கூட்டுத்தொடரில் $k$ என்பது ஒரு மிகைமுழு மற்றும் $k$ என்பது $100$ ன் ஒரு காரணி எனில், $S_n$ என்பது

(1) $5000 - \frac{50}{k}$ **(2) $\frac{5000}{k} + 50$** (3) $\frac{1000}{k} + 10$ (4) $1000 + \frac{10}{k}$

$k = 1$ எனில்

$S_n = 1 + 2 + 3 + \ldots\ldots + 100$

$S_n = \frac{n}{2}[a + l] = \frac{100}{2}(1 + 100)$

$= 50(101)$

$= 5050$

சரியான விடையை காண, (2) ஐத்தேர்ந்தெடுக்க வேண்டும்.

$\frac{5000}{k} + 50 = \frac{5000}{1} + 50$

$= 5000 + 50$

$= 5050$

6. $a_1 = -1$ மற்றும் $a_n = \frac{a_{n-1}}{n+2}$ என கொடுக்கப்பட்டால் $a_4$ ஆனது

(1) $\frac{-1}{20}$ (2) $\frac{-1}{4}$ (3) $\frac{-1}{840}$ **(4) $\frac{-1}{120}$**

$a_1 = -1,\ a_n = \frac{a_{n-1}}{n+2};\quad a_4 = ?$

$a_2 = \frac{a_{2-1}}{2+2} = \frac{a_1}{4} = \frac{-1}{4}$

$a_3 = \frac{a_{3-1}}{3+2} = \frac{a_2}{5} = \frac{\frac{-1}{4}}{5} = \frac{-1}{20}$

$a_4 = \frac{a_{4-1}}{4+2} = \frac{a_3}{6} = \frac{\frac{-1}{20}}{6} = \frac{-1}{120}$

7. ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் $p, q$ மற்றும் $r$வது உறுப்புகள் முறையே $a, b, c$ எனில், $a(q-r) + b(r-p) + c(p-q)$

**(1) 0** (2) $a + b + c$ (3) $p + q + r$ (4) $pqr$

$p$வது உறுப்பு $a$, $q$வது உறுப்பு $b$, $r$வது உறுப்பு $c$

இங்கு $q - r = b - c$

$r - p = c - a$

$p - q = a - b$

$a(q-r) + b(r-p) + c(p-q) = a(b-c) + b(c-a) + c(a-b)$

$= ab - ac + bc - ab + ac - bc$

$= 0$

8. $5, 20, 80, 320, \ldots\ldots, 20480$ என்ற பெருக்குத்தொடர் வரிசையில் எத்தனை உறுப்புகள் உள்ளன?

(1) 5 (2) 6 **(3) 7** (4) 9

$5, 20, 80, 320, \ldots\ldots 20480 \rightarrow$ பெருக்குத்தொடர் வரிசை, $n = ?$

$t_n \Rightarrow ar^{n-1} = 20480$

$a = 5, r = \frac{20}{5} = 4$

$5 \times (4)^{n-1} = 20480 \Rightarrow 4^{n-1} = \frac{20480}{5} = 4096$

$4^{n-1} = 4^6$

$n - 1 = 6$

$n = 6 + 1 = 7;$

| | |
|---|---|
| 4 | 4096 |
| 4 | 1024 |
| 4 | 256 |
| 4 | 64 |
| 4 | 16 |
| 4 | 4 |
| | 1 |

$n = 7$

9. ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் $p$ வது உறுப்பு $q$ மற்றும் $q$ வது உறுப்பு $p$ எனில், அதன் $n$ வது உறுப்பு

**(1) $p+q-n$** (2) $p+q+n$ (3) $p-q+n$ (4) $p-q-n$

$t_p = q,\ t_q = p,\ t_n = ?$

$t_p \Rightarrow a + (p-1)d = q$ ............ (1)

$t_q \Rightarrow a + (q-1)d = p$ ............ (2)

$(-)\quad(-)\qquad(-)$

$(p-1-q+1)d = q-p$

$(p-q)d = q-p$

$(p-q)d = -(p-q)$

$d = -1$

$d = -1$ என (1) ல் பிரதியிட

$a + (p-1)(-1) = q$

$a - p + 1 = q$

$a = q + p - 1$

$t_n = a + (n-1)d$

$a = p+q-1,\ d = -1$ என பிரதியிட

$t_n = p+q-1+(n-1)(-1)$

$= p+q-1-n+1$

$\therefore t_n = p+q-n$

10. ஒரு பெருக்குத்தொடர்வரிசையின் முடிவிலி உறுப்புகள் வரை கூடுதல் 12 மற்றும் முதல் உறுப்பு 8 எனில், பெருக்குத்தொடரின் 4-வது உறுப்பு என்ன?

**(1) $\frac{8}{27}$** (2) $\frac{4}{27}$ (3) $\frac{8}{20}$ (4) $\frac{1}{3}$

பெருக்குத்தொடர்வரிசையில் $\Rightarrow S_\infty = 12,\ a = 8,\ t_4 = ?$

$S_\infty \Rightarrow \frac{a}{1-r} = 12,\ a = 8,\ t_4 = ar^{4-1}$

$\frac{8}{1-r} = 12 \Rightarrow 8 = 12 - 12r$

$8 - 12 = -12r$

$-4 = -12r$

$\frac{-4}{-12} = r$

$r = \frac{1}{3}$

If $a = 8,\ r = \frac{1}{3}$

$t_4 = 8 \times \left(\frac{1}{3}\right)^3 = 8 \times \frac{1}{27}$

$t_4 = \frac{8}{27}$

11. $p, q, r, x, y, z$ என்பவை ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் அமைந்துள்ளன எனில், $5p+3, 5q+3, 5r+3, 5x+3, 5y+3, 5z+3$ என்பவை

(1) ஒரு பெருக்குத்தொடர்வரிசை

**(2) ஒரு கூட்டுத்தொடர்வரிசை**

(3) ஒரு மாறிலி தொடர்வரிசை

(4) ஒரு கூட்டுத்தொடர்வரிசையுமல்ல, பெருக்குத்தொடர்வரிசையுமல்ல

$p, q, r, x, y, z \rightarrow$ கூட்டுத்தொடர்வரிசை

$5p+3, 5q+3, 5r+3, 5x+3, 5y+3, 5z+3$ இது ஒரு கூட்டுத்தொடர்வரிசை (பொது வித்தியாசம் சமமாக உள்ளது)

12. கொடுக்கப்பட்ட ஒரு சதுரத்தின் பக்கங்களின் மையப்புள்ளிகளை இணைத்து மற்றொரு சதுரம் உருவாக்கப்படுகிறது மற்றும் இந்த செயல் முறையானது முடிவில்லாமல் தொடர்கிறது. முதல் சதுரத்தின் பக்கம் 4 செ.மீ எனில், எல்லாச் சதுரங்களின் கூடுதல்

(1) 8 செ.மீ² (2) 16 செ.மீ² **(3) 32 செ.மீ²** (4) 64 செ.மீ²

முதல் சதுரத்தின் பரப்பு $= 4^2 = 16$ செ.மீ²




இரண்டாம் சதுரத்தின் பரப்பு $= \left(2\sqrt{2}\right)^2$

$= 4 \times 2$

$= 8$ செ.மீ²

பெருக்குத்தொடர்வரிசை $16 + 8 + \ldots\ldots$

$a = 16 \quad r = \frac{8}{16} = \frac{1}{2}$

$S_\infty = \frac{a}{1-r} = \frac{16}{1-\frac{1}{2}} = \frac{16}{\frac{1}{2}}$

$= 16 \times \frac{2}{1} = 32$ செ.மீ²

13. ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் 8-வது மற்றும் 12வது உறுப்புகள் முறையே 39 மற்றும் 59 எனில், அதன் முதல் உறுப்பு

(1) 5 (2) 6 **(3) 4** (4) 3

$t_8 = 39,\ t_{12} = 59,\ a = ?$

$t_8 \Rightarrow \ a + 7d = 39$

$t_{12} \Rightarrow a + 11d = 59$ .......... (1)

$a + 7d = 39$ ........... (2)

$(-)\ (-)\ \ (-)$

$4d = 20$

$d = \frac{20}{4} = 5$

$d = 5$ என (2) ல் பிரதியிட, $a + 35 = 39$

$a = 39 - 35$

$a = 4$

14. '$a$' மற்றும் '$b$' என்பன இருமிகை முழுக்கள். இங்கு $a > b$ மற்றும் '$b$' என்பது '$a$' யின் ஒரு காரணி எனில் $(a, b)$ யின் மீ.பொ.வ

**(1) $b$** (2) $a$ (3) $ab$ (4) $\frac{a}{b}$

'$a$' மற்றும் '$b$' என்பன இருமிகை முழுக்கள். இங்கு $a > b$ மற்றும் '$b$' என்பது '$a$' யின் ஒரு காரணி எனில் $(a, b)$ யின் மீ.பொ.வ $b$

15. $m$ மற்றும் $n$ என்பவை சார்பகா எண்கள் எனில், $m^2$ மற்றும் $n^2$ ஆனது

**(1) சார்பகா எண்கள்** (2) சார்பகா எண்கள் அல்ல
(3) இரட்டைப்படை எண் (4) ஒற்றைப்படை எண்

$m$ மற்றும் $n$ என்பவை சார்பகா எண்கள் எனில், $m^2$ மற்றும் $n^2$ ஆனது சார்பகா எண்கள்

16. $a$ என்ற எண்ணின் மிகச்சிறிய பகாக்காரணி 3 மற்றும் $b$ என்ற எண்ணின் மிகச்சிறிய பகாக்காரணி 7 எனில் $a + b$ யின் மிகச்சிறிய பகாக்காரணி

(1) $a + b$ **(2) 2** (3) 5 (4) 10

$a + b = 3 + 7$

www.Padasalai.Net



$= 10$
'10' ன் மிகச்சிறிய பகாக்காரணி 2

17. $a, 3a, 5a, \ldots.$ என்ற தொடரின் முதல் '$n$' உறுப்புகளின் கூடுதல்
(1) $na$ (2) $(2n-1)a$ **(3) $n^2a$** (4) $n^2a^2$

$a, 3a, 5a, \ldots\ldots\ldots S_n = ?$
$a(1+3+5+\ldots\ldots+n) = a(n^2)$
தொடரின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் $n^2a$

18. மிகச்சிறிய பகா எண் மற்றும் மிகச்சிறிய பகு எண் ஆகியவற்றின் மீ.பொ.வ என்ன?
(1) 1 **(2) 2** (3) 3 (4) 4

மிகச்சிறிய பகா எண் மற்றும் மிகச்சிறிய பகு எண் ஆகியவற்றின் மீ.பொ.வ 2

GPK1TC

# 3. இயற்கணிதம்

1. கீழே கொடுக்கப்பட்டவற்றுள் எது மூன்று மாறிகளில் அமைந்த நேரிய சமன்பாடாகும்.
(i) $2X = Z$ (ii) $2\sin X + Y\cos Y + Z\tan Z = 2$
(iii) $X + 2Y^2 + Z = 3$ (iv) $X - Y - Z = 7$
(1) (i) மற்றும் (iii) மட்டும் (2) (i) மற்றும் (iv) மட்டும்
**(3) (iv) மட்டும்** (4) அனைத்தும்

மூன்று மாறிகளில் அமைந்த நேரிய சமன்பாடு $X - Y - Z = 7$

2. $x^2 - x - 1 = 0$ என்ற இருபடி சமன்பாட்டின் மெய்மூலங்கள்
(1) $1, 1$ (2) $-1, 1$ **(3) $\frac{1+\sqrt{5}}{2}, \frac{1-\sqrt{5}}{2}$** (4) மெய்மூலங்கள் இல்லை

$x^2 - x - 1 = 0$
$a = 1,\ b = -1,\ c = -1$
$x = \frac{-b\pm\sqrt{b^2-4ac}}{2a}$
$= \frac{-(-1)\pm\sqrt{(-1)^2-4(1)(-1)}}{(2\times1)}$
$= \frac{1\pm\sqrt{1+4}}{2}$
$= \frac{1\pm\sqrt{5}}{2}$
$\therefore x = \frac{1+\sqrt{5}}{2}, \frac{1-\sqrt{5}}{2}$

3. $p(x)$ மற்றும் $q(x)$ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ மற்றும் மீ.பொ.ம முறையே $2x\,(x+2)$ மற்றும் $24x\,(x+2)^2\,(x-2)$ ஆகும். $p(x) = 8x^3 + 32x^2 + 32x$ எனில் $q(x)$ என்பது
(1) $4x^3 - 16x$ **(2) $6x^3 - 24x$** (3) $12x^3 + 24x$ (4) $12x^3 - 24x$

$p(x) = 8x^3 + 32x^2 + 32x$
$p(x)$ மற்றும் $q(x)$ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ $= 2x(x+2)$
$p(x)$ மற்றும் $q(x)$ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.ம $= 24x\,(x+2)^2\,(x-2)$

$p(x) \times q(x) = p(x)$ மற்றும் $q(x)$ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ

$\times\, p(x)$ மற்றும் $q(x)$ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.ம

$q(x) = \dfrac{p(x) \text{ மற்றும் } q(x) \text{ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ} \times p(x) \text{ மற்றும் } q(x) \text{ என்ற பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.ம}}{p(x)}$

$= \frac{2x\,(x+2) \times [24x(x+2)^2\,(x-2)]}{8x^3+32x^2+32x}$

$[8x^3 + 32x^2 + 32x = 8x(x^2 + 4x + 4) = 8x(x+2)^2]$

$= \frac{2x(x+2) \times 24x(x+2)^2(x-2)}{8x\,(x+2)^2}$

$= 6x\,(x+2)\,(x-2)$

$= 6x\,(x^2 - 4)$

$q(x) = 6x^3 - 24x$

4. முடிவிலி எண்ணிக்கையில் உள்ள தீர்வு, கீழ்க்கண்டறவற்றில் எந்த வரைபடத்தைக் குறிக்கும்.
(1) பொதுவான புள்ளி இல்லாத மூன்று தளங்கள்.
(2) ஒரே புள்ளியில் வெட்டும் மூன்று தளங்கள்.
**(3) மூன்று தளங்களும் ஒரு நேர்க்கோட்டில் வெட்டும் அல்லது ஒன்றன் மீது ஒன்று பொருந்தும்.**
(4) இவற்றில் ஏதுமில்லை.

முடிவிலி எண்ணிக்கையில் உள்ள தீர்வு, மூன்று தளங்களும் ஒரு நேர்க்கோட்டில் வெட்டும் அல்லது ஒன்றன் மீது ஒன்று பொருந்தும்.

5. பின்வருவனவற்றில் எது சரியானது?
(i) ஒவ்வொரு பல்லுறுப்புக்கோவையும் முடிவுறு எண்ணிக்கையில் மடங்குகளை பெற்றிருக்கும்.
(ii) இரண்டு இருபடி பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ ஒரு மாறிலியாக இருக்கலாம்.
(iii) இரண்டு பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ ஒரு மாறிலியாக இருக்கலாம்.
(iv) இரு பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ வின் படி எப்போதும் அவைகளின் மீ.பொ.ம. வின் படியை விட குறைவாக இருக்கும்.
(1) (i) மற்றும் (ii) (2) (iii) மற்றும் (iv) **(3) (iii)** மட்டும் (4) (iv) மட்டும்

இரண்டு பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ ஒரு மாறிலியாக இருக்கலாம்.

6. $4m^2 - 24m + 36 = 0$ யின் வர்க்கமூலம்
(1) $4(m-3)$ **(2) $2(m-3)$** (3) $(2m-3)^2$ (4) $(m-3)$

$4m^2 - 24m + 36 = 0$

$4(m^2 - 6m + 9) = 0$

$\sqrt{4(m-3)^2} = 0$

$2(m-3) = 0$

7. கீழ்க்கண்டவற்றைக் கருதுக:
(i) $X + Y$ மற்றும் $X^8 - Y^8$ யின் மீ.பொ.வ $X + Y$ ஆகும்.
(ii) $X + Y$ மற்றும் $X^8 + Y^8$ யின் மீ.பொ.வ $X + Y$ ஆகும்.
(iii) $X - Y$ மற்றும் $X^8 + Y^8$ யின் மீ.பொ.வ $X - Y$ ஆகும்.
(iv) $X - Y$ மற்றும் $X^8 - Y^8$ யின் மீ.பொ.வ $X - Y$ ஆகும்.
மேலே கொடுக்கப்பட்டவற்றுள் எவைச் சரியானவை?
(1) (i) மற்றும் (ii) (2) (ii) மற்றும் (iii) **(3) (i) மற்றும் (iv)** (4) (ii) மற்றும் (iv)

www.Padasalai.Net



சரியானவை (i) மற்றும் (iv) ஆகும்.

8. எந்த மதிப்புகளுக்கு $\frac{x^2+5x+6}{x^2+8x+15}$ என்பது வரையறுக்கப்படவில்லை?

**(1) $-3, -5$** (2) 5 (3) $-2, -3, -5$ (4) $-2, -3$

$x^2 + 8x + 15 = 0$

$(x + 3)(x + 5) = 0$

எனவே $x = -3$ (மற்றும்) $-5$

$x = -3, -5$ ஆகிய மதிப்புகளுக்கு $\frac{x^2+5x+6}{x^2+8x+15}$ ஆனது வரையறுக்கப்படவில்லை.

9. $\frac{x^2+7x+12}{x^2+8x+15} \times \frac{x^2+5x}{x^2+6x+8}$

(1) $x + 2$ **(2) $\frac{x}{x+2}$** (3) $\frac{35x^2+60x}{48x^2+120}$ (4) $\frac{1}{x+2}$

$\frac{x^2+7x+12}{x^2+8x+15} \times \frac{x^2+5x}{x^2+6x+8}$

$= \frac{(x+4)(x+3)}{(x+5)(x+3)} \times \frac{x(x+5)}{(x+4)(x+2)} = \frac{x}{x+2}$

10. $\frac{p}{q} = a$ எனில் $\frac{p^2+q^2}{p^2-q^2}$ என்பது

**(1) $\frac{a^2+1}{a^2-1}$** (2) $\frac{1+a^2}{1-a^2}$ (3) $\frac{1-a^2}{1+a^2}$ (4) $\frac{a^2-1}{a^2+1}$

$\frac{p}{q} = a$

$\frac{p^2+q^2}{p^2-q^2}$ ஐ $q^2$ ஆல் வகுக்க

$= \frac{\frac{p^2}{q^2}+\frac{q^2}{q^2}}{\frac{p^2}{q^2}-\frac{q^2}{q^2}} = \frac{\left(\frac{p}{q}\right)^2+1}{\left(\frac{p}{q}\right)^2-1}$

$= \frac{a^2+1}{a^2-1} \qquad \left(\because \frac{p}{q} = a\right)$

11. பரவளையத்திற்கு, செங்குத்தாக அமையும் சமச்சீர் கோடானது ____________ ப் பிரிக்கும்.

(1) 3 சம பகுதிகளாக (2) 5 சம பகுதிகளாக

**(3) 2 சம பகுதிகளாக** (4) 4 சம பகுதிகளாக

பரவளையத்தை, செங்குத்தாக அமையும் சமச்சீர் கோடானது 2 சம பகுதிகளாகப் பிரிக்கும்.

12. $y = -3x^2$ என்ற பரவளையம்

(1) மேற்புறம் திறந்தவாறு அமையும் **(2) கீழ்ப்புறம் திறந்தவாறு அமையும்**

(3) வலப்புறம் திறந்தவாறு அமையும். (4) இடப்புறம் திறந்தவாறு அமையும்

$y = -3x^2$ என்ற பரவளையம் கீழ்ப்புறம் திறந்தவாறு அமையும்.

13. $(a^2 - b^2)x^2 - (a + b)^2x + (a^3 - b^3) = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கல் ஆகிய இரண்டின் பெருக்கற்பலன்

**(1)** $\boldsymbol{\frac{a^2+ab+b^2}{a-b}}$ (2) $\frac{a+b}{a-b}$ (3) $\frac{a-b}{a+b}$ (4) $\frac{a-b}{a^2+ab+b^2}$

$(a^2-b^2)x^2-(a+b)^2+(a^3-b^3)=0$

$a=(a^2-b^2)$

$=(a+b)(a-b)$

$b=-(a+b)^2$

$=-(a+b)(a+b)$

$c=(a^3-b^3)$

$=(a-b)\,(a^2+ab+b^2)$

மூலங்களின் கூடுதல், $\alpha+\beta=\frac{-b}{a}$

$=\frac{-(-(a+b)(a+b))}{(a+b)(a-b)}$

$=\left(\frac{a+b}{a-b}\right)$

மூலங்களின் பெருக்கற்பலன் $\alpha\beta=\frac{c}{a}$

$=\frac{(a-b)(a^2+ab+b^2)}{(a+b)(a-b)}$

$=\frac{a^2+ab+b^2}{a+b}$

மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கல் ஆகிய இரண்டின் பெருக்கற்பலன்

$=\frac{a+b}{a-b}\times\frac{a^2+ab+b^2}{a+b}$

$=\frac{a^2+ab+b^2}{a-b}$

14. ஒரு பூஜ்ஜியம் 5 மற்றும் பூஜ்ஜியங்களின் கூடுதல் 0 கொண்ட பல்லுறுப்புக் கோவை

**(1)** $\boldsymbol{x^2-25}$ (2) $x^2-5$ (3) $x^2-5x$ (4) $x^2-5x+5$

இருபடிச்சமன்பாட்டின் வடிவம்

$x^2-$ (மூலங்களின் கூடுதல்)$x+$ மூலங்களின் பெருக்கல் $=0$

$\alpha+\beta=0$

$5+\beta=0$

$\beta=0-5$

$\beta=-5$

$x^2-(5-5)x+(5\times-5)$

$x^2-0x-25$

∴ தேவையான இருபடி பல்லுறுப்புக்கோவை $x^2-25$

15. கீழ்க்கண்டவற்றைக் கருதுக.

(i) ஒவ்வொரு திசையிலி அணியும் அலகு அணியாகும்.

(ii) ஒவ்வொரு அலகு அணியும் திசையிலி அணியாகும்.

(iii) ஒவ்வொரு மூலைவிட்ட அணியும் அலகு அணியாகும்.

(iv) ஒவ்வொரு பூஜ்ஜிய அணியும் திசையிலி அணியாகும்.

கொடுக்கப்பட்டவைகளில் சரியானவை

(1) (i) மற்றும் (iii) மட்டும் (2) (iii) மட்டும் (3) (iv) மட்டும் **(4) (ii) மற்றும் (iv) மட்டும்**

16. $2A+3B=\begin{bmatrix}2 & -1 & 4\\3 & 2 & 5\end{bmatrix}$ மற்றும் $A+2B=\begin{bmatrix}5 & 0 & 3\\1 & 6 & 2\end{bmatrix}$ எனில் $B$ அணி

(1) $\begin{bmatrix}8 & -1 & -2\\-1 & 10 & -1\end{bmatrix}$ (2) $\begin{bmatrix}8 & -1 & 2\\-1 & 10 & -1\end{bmatrix}$ (3) $\begin{bmatrix}8 & 1 & 2\\1 & 10 & 1\end{bmatrix}$ **(4)** $\begin{bmatrix}\mathbf{8} & \mathbf{1} & \mathbf{2}\\\mathbf{-1} & \mathbf{10} & \mathbf{-1}\end{bmatrix}$

$2A+3B=\begin{bmatrix}2 & -1 & 4\\3 & 2 & 5\end{bmatrix}$; $A+2B=\begin{bmatrix}5 & 0 & 3\\1 & 6 & 2\end{bmatrix}$

$B=?$

$2A+3B=\begin{bmatrix}2 & -1 & 4\\3 & 2 & 5\end{bmatrix}$ ……… (1)

$A+2B=\begin{bmatrix}5 & 0 & 3\\1 & 6 & 2\end{bmatrix}$ ………….. (2)

$(2)\times 2 \Rightarrow 2A+4B=\begin{bmatrix}10 & 0 & 6\\2 & 12 & 4\end{bmatrix}$

$(1) \quad \Rightarrow 2A+3B=\begin{bmatrix}2 & -1 & 4\\3 & 2 & 5\end{bmatrix}$

$(-) \quad (-) \quad (-)$

$B=\begin{bmatrix}8 & 1 & 2\\-1 & 10 & -1\end{bmatrix}$

17. $\begin{bmatrix}4 & 3 & 2\end{bmatrix}\begin{bmatrix}1\\-2\\x\end{bmatrix}=[6]$ எனில் $x$ ன் மதிப்பு

**(1) 4** (2) 3 (3) 2 (4) 1

$\begin{bmatrix}4 & 3 & 2\end{bmatrix}\begin{bmatrix}1\\-2\\x\end{bmatrix}=[6]$, $x=?$

$1\times 3$

$3\times 1 = 1\times 1$

$4-6+2x=6$

$-2+2x=6$

$2x=6+2$

$x=\frac{8}{2}=4$

18. $P$ மற்றும் $Q$ என்பன இரு அணிகள் எனில், கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

**(1) $PQ \neq QP$** (2) $(P^T)^T \neq P$ (3) $P+Q \neq Q+P$ (4) அனைத்தும் உண்மை

$P$ மற்றும் $Q$ என்பன இரு அணிகள் எனில், $PQ \neq QP$

19. $A=\begin{bmatrix}1 & 2\\3 & 4\\5 & 6\end{bmatrix}_{3\times 2}$ மற்றும் $B=\begin{bmatrix}1 & 2 & 3\\4 & 5 & 6\end{bmatrix}_{2\times 3}$ எனில், கீழ்க்கண்டவற்றுள் சாத்தியமானதை கூறுக

(i) $A^2$ (ii) $B^2$ (iii) $AB$ (iv) $BA$

(1) (i) மட்டும் (2) (ii) மற்றும் (iii) மட்டும்

**(3) (iii) மற்றும் (iv) மட்டும்** (4) மேற்கண்ட மூன்றும்

$$A = \begin{bmatrix} 1 & 2 \\ 3 & 4 \\ 5 & 6 \end{bmatrix}_{3\times2} \quad , \quad B = \begin{bmatrix} 1 & 2 & 3 \\ 4 & 5 & 6 \end{bmatrix}_{2\times3}$$

(iii) மற்றும் (iv) மட்டும் சாத்தியமானது.

20. $A = \begin{bmatrix} y & 0 \\ 3 & 4 \end{bmatrix}, I = \begin{bmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{bmatrix}$ மற்றும் $A^2 = 16I$ எனில்,

(1) $y = 4$ (2) $y = 5$ **(3) $y = -4$** (4) $y = 16$

$$A = \begin{bmatrix} y & 0 \\ 3 & 4 \end{bmatrix},\ I = \begin{bmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{bmatrix},\ A^2 = 16I,\ y = ?$$

$$A^2 = \begin{bmatrix} y & 0 \\ 3 & 4 \end{bmatrix}\begin{bmatrix} y & 0 \\ 3 & 4 \end{bmatrix} = \begin{bmatrix} y^2 + 0 & 0 + 0 \\ 3y + 12 & 0 + 16 \end{bmatrix}$$

$$A^2 = \begin{bmatrix} y^2 & 0 \\ 3y + 12 & 16 \end{bmatrix}$$

$$16I = 16\begin{bmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{bmatrix} = \begin{bmatrix} 16 & 0 \\ 0 & 16 \end{bmatrix}$$

$$A^2 = 16I$$

$$\begin{bmatrix} y^2 & 0 \\ 3y + 12 & 16 \end{bmatrix} = \begin{bmatrix} 16 & 0 \\ 0 & 16 \end{bmatrix}$$

$$3y + 12 = 0$$

$$3y = -12$$

$$y = \frac{-12}{3}$$

$$y = -4$$

GPK1TC

# 4. வடிவியல்

1. முக்கோணங்கள் $PQR$ மற்றும் $LMN$ ஆகியவை வடிவொத்தவை. மேலும் $4PQ = LM$ மற்றும் $QR = 6$ செ.மீ எனில், $MN$ ஆனது

(1) 12 செ.மீ **(2) 24 செ.மீ** (3) 10 செ.மீ (4) 36 செ.மீ







$$4PQ = LM$$

$$PQ = \frac{LM}{4}$$

$$\frac{PQ}{LM} = \frac{QR}{MN}$$

$$\frac{LM}{4LM} = \frac{6}{MN}$$

$$MN = 6 \times 4$$

$MN = 24$ செ.மீ

2. கொடுக்கப்பட்ட படத்தில் $DE \parallel AC$ எனில், கீழ்க்கண்டவற்றுள் எது உண்மை?



(1) $x = \frac{ay}{b+a}$ (2) $x = \frac{a+b}{ay}$

**(3) $x = \frac{ay}{b-a}$** (4) $\frac{x}{y} = \frac{a}{b}$

$\Delta ABC \sim \Delta BDE$ (வடிவொத்தவை)

$\frac{BE}{BC} = \frac{DE}{AC}$

$\frac{x}{a} = \frac{x+y}{b}$

$bx = ax + ay$

$bx - ax = ay$

$x(b-a) = ay$

$x = \frac{ay}{b-a}$

3. $\Delta PQR$-ல் பக்கங்கள் $PQ$மற்றும் $PR$-ன் மீது அமைந்துள்ள புள்ளிகள் முறையே $S$ மற்றும் $T$ ஆகும். $PS = 3$செ.மீ, $SQ = 6$செ.மீ, $PT = 5$செ.மீ மற்றும் $TR = 10$செ.மீ எனில், $QR$-ன் மதிப்பு

(1) $4ST$ (2) $5ST$ **(3) $3ST$** (4) $3QR$

$\Delta PST \sim \Delta PQR$

$\frac{PS}{PQ} = \frac{PT}{PR} = \frac{ST}{QR}$

$\frac{3}{9} = \frac{5}{15} = \frac{ST}{QR}$

$\frac{ST}{QR} = \frac{5}{15}$

$ST \times 3 = QR$

$QR = 3ST$




4. கொடுக்கப்பட்ட படத்தில், $DE \parallel BC$. $BD = x-3, BA = 2x, CE = x-2$ மற்றும் $AC = 2x+3$ எனில், $x$-ன் மதிப்பு




(1) 3 (2) 6

**(3) 9** (4) 12

| | |
|---|---|
| $AD = AB - BD$ | $AE = AC - EC$ |
| $= 2x - (x-3)$ | $= 2x + 3 - (x-2)$ |
| $= 2x - x + 3$ | $= 2x + 3 - x + 2$ |
| $AD = x + 3$ | $AE = x + 5$ |




$\frac{AD}{DB} = \frac{AE}{EC}$

$\frac{x+3}{x-3} = \frac{x+5}{x-2}$

$(x+3)(x-2) = (x+5)(x-3)$

$x^2 - 2x + 3x - 6 = x^2 - 3x + 5x - 15$

$x^2 - x^2 + x - 2x + 15 - 6 = 0$

$-x + 9 = 0$

$-x = -9$

$x = 9$

5. இரு வடிவொத்த முக்கோணங்களின் பரப்பளவுகளின் விகிதமானது கீழ்க்கண்டவற்றுள் எதற்குச் சமமாகும்.

(1) அவற்றின் ஒத்த பக்கங்களின் விகிதத்திற்கு
(2) அவற்றின் ஒத்த பக்கங்களின் கணங்களின் விகிதத்திற்கு
(3) அவற்றின் ஒத்த குத்துயரங்களின் விகித்திற்கு
**(4) அவற்றின் ஒத்த பக்கங்களின் வர்க்கங்களின் விகிதத்திற்கு**

6. முக்கோணம் $ABC$ –யில் $\angle A$–யின் இருசமவெட்டி AD ஆகும். $AB = 4$ செ.மீ $BD = 6$ செ.மீ $DC = 8$செ.மீ எனில், $AC$-யின் மதிப்பு

**(1) $\frac{16}{3}$ செ.மீ** (2) $\frac{32}{3}$ செ.மீ (3) $\frac{3}{16}$ செ.மீ (4) $\frac{1}{2}$ செ.மீ

$\frac{AB}{AC} = \frac{BD}{DC}$

$\frac{4}{AC} = \frac{6}{8} \Rightarrow 3AC = 16$

$AC = \frac{16}{3}$ செ.மீ




7. ஒரு முக்கோணத்தின், ஒரு கோணத்தின் உட்புற இருசமவெட்டியானது எதிர்பக்கத்தை இரு சமபாகங்களாகப் பிரிக்கிறது எனில், அம்முக்கோணமானது

(1) செங்கோண முக்கோணம் (2) சமபக்க முக்கோணம்
(3) அசமபக்க முக்கோணம் **(4) இருசமபக்க முக்கோணம்**

8. $a$ அலகு பக்கமுடைய முக்கோணத்தின் உயரமானது

(1) $\frac{a}{2}$ (2) $\sqrt{3}a$ **(3) $\frac{\sqrt{3}}{2}a$** (4) $\frac{\sqrt{3}}{4}\ a$

9. ஒரு செங்கோண முக்கோணத்தின் சுற்றளவு 40செ.மீ மற்றும் அதன் கர்ணம் 15 செ.மீ எனில், அம்முக்கோணத்தின் பரப்பளவு

**(1) 100 செ.மீ$^2$** (2) 200 செ.மீ$^2$ (3) 160 செ.மீ$^2$ (4) 225 செ.மீ$^2$

ஒரு செங்கோண முக்கோணத்தின் சுற்றளவு 40செ.மீ மற்றும் அதன் கர்ணம் 15 செ.மீ

$a + b + c = 40$

$a + b = 40 - 15$

$a + b = 25$




பிதாகரஸ் தேற்றப்படி,

$a^2 + b^2 = 15^2$

$(a+b)^2 - 2ab = 225$

$25^2 - 2ab = 225$

$2ab = 625 - 225$

$2ab = 400$

$ab = 200$

முக்கோணத்தின் பரப்பளவு $= \frac{1}{2}bh$

$= \frac{1}{2}ab$

$= \frac{1}{2}(200)$

$= 100$ செ.மீ$^2$

10. ஒரு வட்டத்தினை இரு வெவ்வேறு புள்ளிகளில் வெட்டும் கோடானது

(1) தொடுபுள்ளி **(2) வெட்டுக்கோடு** (3) விட்டம் (4) தொடுகோடு

11. ஒரு வட்டத்தில் இரு ஆரங்களுக்கு இடைப்பட்ட கோணம் $130°$ஆகும். ஆரங்களின் முடிவில் வரையப்பட்ட தொடுகோடுகளுக்கு இடைப்பட்ட கோணமானது

**(1) $50°$** (2) $90°$ (3) $40°$ (4) $70°$

நாற்கரம் OABCலிருந்து,

$\angle A + \angle B + \angle C + \angle O = 360°$

$90° + 90° + \angle C + 130° = 360°$

$\angle C = 360° - 310°$

$\angle C = 50°$




12. கொடுக்கப்பட்ட படத்தில் $\angle OAB = 60°$ மற்றும் $OA = 6$ செ.மீ எனில், வட்டத்தின் ஆரமானது




(1) $\frac{3}{2}\sqrt{3}$ செ.மீ (2) 2 செ.மீ

**(3) $3\sqrt{3}$ செ.மீ** (4) $2\sqrt{3}$ செ.மீ

$30^0 : 60^0 : 90^0 \Rightarrow 1 : \sqrt{3} : 2$

2 பங்கு $= 6$ செ.மீ

1 பங்கு $= \frac{6}{2} = 3$ செ.மீ

ஆரம் $= 3\sqrt{3}$ செ.மீ

13. கொடுக்கப்பட்ட படத்தில் $OC = 9$செ.மீ மற்றும் $OB = 15$ செ.மீ எனில், $OB + BD$ –யின் மதிப்பு




(1) 23 செ.மீ (2) 24 செ.மீ

**(3) 27 செ.மீ** (4) 30 செ.மீ

$BC = BD$

$BD = \sqrt{15^2 - 9^2}$

$= \sqrt{225 - 81}$

$= \sqrt{144}$

$BD = 12$ செ.மீ

$OB + BD = 15 + 12$

$= 27$ செ.மீ

14. இரண்டு பொது மைய வட்டங்களின் ஆரங்கள் $a$ மற்றும் $b$ ஆகும், இதில், $a > b$. சிறிய வட்டத்தினை தொட்டுச் செல்லும் பெரிய வட்டத்தின் நாணின் நீளம்

**(1) $\sqrt{a^2 - b^2}$** (2) $2\sqrt{a^2 - b^2}$ (3) $\sqrt{a^2 + b^2}$ (4) $2\sqrt{a^2 + b^2}$

$r_1 = b, r_2 = a, a > b$

$\Delta OAB$லிருந்து,

$\angle B = 90^0$

நாணின் நீளம் $AC = \sqrt{a^2 - b^2}$




15. 2செ.மீ, 3செ.மீ மற்றும் 4 செ.மீ பக்கங்களைக் கொண்ட முக்கோணத்தின் முனைகளை மையமாகக் கொண்டு வரையப்படும் மூன்று வட்டங்களில், ஒவ்வொரு வட்டமும் மற்ற இரு வட்டங்களை தொட்டுச் செல்கிறது எனில், மிகச் சிறிய வட்டத்தின் விட்டமானது

**(1) 1 செ.மீ** (2) 3 செ.மீ (3) 5 செ.மீ (4) 4 செ.மீ

$x + y = 2$............ (1)
$y + z = 4$............ (2)
$x + z = 3$............ (3)
(1) + (2) + (3)
$2x + 2y + 2z = 9$
$x + y + z = \frac{9}{2}$
$2 + z = \frac{9}{2}$
$z = \frac{9}{2} - 2$
$z = \frac{5}{2} = 2.5$
$\therefore z = 2.5$
$x = 3 - 2.5 = 0.5$
$y = 4 - 2.5 = 1.5$
$x = 0.5$ எனில்
விட்டம் $= 0.5 \times 2 = 1.0$
$= 1$ செ.மீ




GPK1TC

# 5. ஆயத்தொலைவு வடிவியல்

1. $(-3, 10)$ மற்றும் $(6, -8)$ ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டினை $(-1,6)$ என்ற புள்ளி உட்புறமாக பிரிக்கும் விகிதம்
(1) 7:2 (2) 3:4 **(3) 2:7** (4) 5:3

$(-3,10), (6,-8), m:n = ?$
$\left(\frac{mx_2+nx_1}{m+n}, \frac{my_2+ny_1}{m+n}\right) = (-1,6)$
$\frac{m(6)+n(-3)}{m+n} = -1; \frac{m(-8)+n(10)}{m+n} = 6$
$6m - 3n = -m - n$
$6m + m = -n + 3n$
$7m = 2n$
$\frac{m}{n} = \frac{2}{7}$
$m:n = 2:7$

2. $(a, b + c), (b, c + a)$ மற்றும் $(c, a + b)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு
(1) $a + b + c$ (2) $abc$ (3) $(a + b + c)^2$ **(4) 0**

$(a, b + c), (b, c + a)(c, a + b); A = ?$
$A = \frac{1}{2}\begin{Bmatrix} a & b & c & a \\ b+c & c+a & a+b & b+c \end{Bmatrix}$
$= \frac{1}{2}\{(ac + a^2 + ab + b^2 + bc + c^2) - (b^2 + bc + c^2 + ac + a^2 + ab)\}$
$= \frac{1}{2}\{a^2 + b^2 + c^2 + ab + bc + ac - a^2 - b^2 - c^2 - ab - bc - ac\}$
$= \frac{1}{2}(0)$
$= 0$

3. $(0,0),(a,0)$ மற்றும் $(0,b)$ என்ற புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனில்,
(1) $a=b$ (2) $a+b=0$ **(3) $ab=0$** (4) $a\neq b$

$(0,0),(a,0)$ மற்றும் $(0,b)$ என்ற புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனில்,

$$\frac{1}{2}\begin{Bmatrix}0 & a & 0 & 0\\ 0 & 0 & b & 0\end{Bmatrix}=0$$

$$\frac{1}{2}\{0+ab+0\}-\{0+0+0\}=0$$

$$\frac{1}{2}\{ab\}=0$$

$$ab=0$$

4. $A\left(\frac{x}{2},\frac{y+1}{2}\right)$ மற்றும் $B(x+1,y-3)$ ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத் துண்டின் மையப்புள்ளி $C(5,-2)$ எனில் $x,y$-யின் மதிப்பு
**(1) $(6,-1)$** (2) $(-6,1)$ (3) $(-2,1)$ (4) $(3,5)$

$A\left(\frac{x}{2},\frac{y+1}{2}\right),B(x+1,y-3),M=C(5,-2)$ மையப்புள்ளி $\left(\frac{x_1+x_2}{2},\frac{y_1+y_2}{2}\right)$

$$\left(\frac{\frac{x}{2}+(x+1)}{2},\frac{\frac{y+1}{2}+(y-3)}{2}\right)=(5,-2)$$

$$\left(\frac{\frac{x+2x+2}{2}}{2},\frac{\frac{y+1+2y-6}{2}}{2}\right)=(5,-2)$$

$$\left(\frac{3x+2}{4},\frac{3y-5}{4}\right)=(5,-2)$$

| | |
|---|---|
| $\frac{3x+2}{4}=5$ | $\frac{3y-5}{4}=-2$ |
| $3x+2=20$ | $3y-5=-8$ |
| $3x=20-2$ | $3y=-8+5$ |
| $3x=18$ | $3y=-3$ |
| $x=\frac{18}{3}=6$ | $y=-\frac{3}{3}=-1$ |
| $x=6$ | $y=-1$ |

$\therefore\ (x,y)=(6,-1)$

5. $(1,2),(-5,6),(7,-4)$ மற்றும் $(k,-2)$ ஆகியவற்றை வரிசையான நான்கு முனைப் புள்ளிகளாக கொண்ட நாற்கரத்தின் பரப்பு பூஜ்ஜியம் எனில் k-யின் மதிப்பு
(1) $-4$ (2) $-2$ (3) $6$ **(4) 3**

$A(1,2),B(-5,6),C(7,-4),D(k,-2),k=?$

$$A=\frac{1}{2}\begin{Bmatrix}1 & -5 & 7 & k & 1\\ 2 & 6 & -4 & -2 & 2\end{Bmatrix}=0$$

$$\Rightarrow\frac{1}{2}\{(6+20-14+2k)-(-10+42-4k-2)\}=0$$

$$\frac{1}{2}\{(12+2k)-((30-4k)\}=0$$

$$\frac{1}{2}\{6k-18\}=0$$

$$6k-18=0$$

$$6k=18$$

$$k=\frac{18}{6};$$

$$k=3$$

6. $(5,3)$ என்ற புள்ளி வழிச் செல்லும் $y$ அச்சுக்கு இணையான நேர் கோட்டின் சமன்பாடு

(1) $y = 5$ (2) $y = 3$ **(3) $x = 5$** (4) $x = 3$

$(5,3)$ என்ற புள்ளி வழிச் செல்லும் $y$ அச்சுக்கு இணையான நேர் கோட்டின் சமன்பாடு
$x = 5$

7. $2y = x + 8$ என்ற நேர்கோட்டின் சாய்வானது

**(1) $\frac{1}{2}$** (2) 1 (3) 8 (4) 2

$x - 2y - 8 = 0$

சாய்வு $= \frac{-x\text{யின் கெழு}}{y\text{யின் கெழு}} = \frac{-1}{-2} = \frac{1}{2}$

8. கொடுக்கப்பட்ட கோடு $\frac{y}{2} = x - p$ ஆனது $(-4,4)$ என்ற புள்ளி வழிச் சென்றால் p-யின் மதிப்பு

(1) $-4$ **(2) $-6$** (3) 0 (4) 8

$\frac{y}{2} = x - p, (-4,4),\ p\ =?$

